# பரிசுத்த ஆவி.

இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

*யோவா 16:7 நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.*

இயேசு கிறிஸ்து தான் திரும்பி செல்வதற்கு முன்பாக உரைத்த வாக்கியங்கள் இவை. நான் போவதும் பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்திற்கு வருவதும் உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும். இது இயேசுவின் ஊழியத்தை குறைத்து மதிப்பிடுவது அல்ல. பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை சரியாக மதிப்பிடுவது. இதை சொன்னது இயேசு கிறிஸ்து. இந்த வேதபாடம் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய சகல காரியங்களும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முழுமையான வேத பாடம் அல்ல. இந்த வேத பாடத்தில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய சில காரியங்களை மாத்திரம் படிப்போம். நமக்கு நன்கு தெரிந்த காரியங்களை மீண்டும் மீண்டும் சொல்ல நான் விரும்பவில்லை. வழக்கமாக கற்பித்துக்கொடுக்கப்படாத, அல்லது தவறாக மனதிலாக்கப்பட்டிருக்கிற சில காரியங்களை மாத்திரம் இந்த வேத பாடத்தில் படிப்போம்.

பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தில் ஒருவர். வேதாகமத்தின் தொடக்கத்திலேயே பரிசுத்த ஆவியானவரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சிருஷ்டிப்பில் தேவன் செய்த எல்லாம், பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே நிறைவேற்றப்பட்டது. *ஆதி 1:2 பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.* இங்கே **"அசைவாடிக்கொண்டிருந்தார்"** என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற எபிரேய வார்த்தை **"ராகாப்"** என்பதாகும். இதன் சரியான அர்த்தம் **"அடைகாப்பது".** ஒரு பறவை முட்டைகளை அடைகாப்பது போல இருப்பது. எபிரேய மூல வார்த்தை இப்படி இருக்க, அசைவாடிக்கொண்டிருந்தார் என்ற தமிழ் வார்த்தையினால் பலரும் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி சில வினோத தத்துவங்களை உருவாக்கிக்கொண்டு விட்டனர். இங்கே நாம் எடுக்க வேண்டிய சரியான அர்த்தம், **பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டிக்கப்படுகிறவைகளை உலகத்தில் தோற்றுவிக்க தயாராக இருந்தார்.** இந்த வார்த்தையில் இருந்து பரிசுத்த ஆவியானவர் ஒரு தீபத்தை போல, புகையை போல, மெழுகுவர்த்தியை போல, காற்றில் ஆடும் நீராவியை போல இருக்கிறார் என்று அர்த்தம் கொள்வது சரியல்ல. பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தில் ஒருவர். அவருக்கு, தேவனைப்போல, இயேசு கிறிஸ்துவை போல ஆவிக்குரிய சரீரம், ஆத்துமா, ஆவி உண்டு (He is a person) *(ஆதி 1:26).*

தேவன் சிருஷ்டித்த எல்லாவற்றையும், உலகத்தில் இருக்கிறவைகளாக கொண்டு வந்தது **"பரிசுத்த அவியானவரின் வல்லமை".** தேவனுடைய சிருஷ்டிப்பு நடத்திப்பிக்கப்பட்டது " பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே ". தேவன் ஒரு காரியத்தை எண்ணுகிறார் ( கருதுகிறார் ) - இயேசு அதை பேசுகிறார் - பரிசுத்த ஆவியானவர் அதை நடப்பிக்கிறார். தேவன் இயேசுவை பூமிக்கு அனுப்ப கருதினார் - வார்த்தையான இயேசுவை உபயோகித்தார் - பரிசுத்த ஆவியானவர் மரியாளின் மேல் நிழலாடினார்...மரியாள் இயேசுவை கர்ப்பம் தரித்தார்கள். இது **"திரித்துவம்"** செயல் படுகிற விதம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி சேர்ந்தே சகலத்தையும் செய்கிறார்கள். அவர்கள் ஒன்றானவர்கள். இயேசு "பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்யப்படாத வரை" தனது பகிரங்க ஊழியத்தை, அற்புதங்களை செய்ய வில்லை. பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரை எவ்வளவாய் மதிக்கிறார்கள், எவ்வளவு உயர்வாக வைத்திருக்கிறார்கள், ஆகையினால் நாமும் பரிசுத்த ஆவியானவருக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று, கீழ்க்காணும் வசனங்களில் இருந்து நாம் மனதிலாக்கிக்கொள்வோம்.

*சக 4:6 அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*மத் 12:31 ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தச் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை.*

*மத் 12:32 எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.*

இயேசு கிறிஸ்துவின் வல்லமையான பூலோக ஊழியம், அவர் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற பிறகுதான் ஆரம்பித்தது. இயேசு தன் வல்லமையான, வெற்றிகரமான, பரிபூரணமான வாழ்க்கைக்கு காரணராக **பரிசுத்த ஆவியானவரையே** குறிப்பிடுகிறார்.

*லூக் 4:18 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,*
*லூக் 4:19 கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, ( ஏசாயா 61:1,2).*

இயேசுவால் ஒரு வல்லமையான வாழ்க்கை, வல்லமையான ஊழியம் - பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் செய்ய முடியாது - என்றால், நம்மாலும் ஒரு வல்லமையான வாழ்க்கை - வல்லமையான ஊழியம், பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் செய்ய முடியாது - கூடாது. பரிசுத்த ஆவியானவர் ஒருவருடைய வாழ்க்கையில் இல்லாமல், யாராலும் ஒரு உபயோகமான வாழ்க்கை, வல்லமையான வாழ்க்கை, ஊழியம் செய்ய முடியாது. வேதாகமத்தை உண்மையாக விசுவாசிக்கும் யாரும் இதை நன்றாக மனதிலாக்கிக்கொள்ளலாம்.

தேவன் தங்களுக்காக வைத்திருக்கும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். ஆனாலும் பலரும் அவ்வாறு பெற்றுக்கொள்வதில்லை. இது அவ்விசுவாசிகளின் மனதில் பல கேள்விகளை கொண்டு வர ஏதுவாகிறது. வல்லமை, கிரியை இல்லாத ஒரு விசுவாசியின் வாழ்க்கை, இயேசுவை பற்றி ஒரு தவறான சாட்சி சொல்லுகிற வாழ்க்கை. தேவன் விரும்புகிற பலதும் ஏன் பலரது வாழ்க்கையில் இல்லை என்பதற்கான சில முக்கிய காரணங்களை இப்போது பார்ப்போம்.
***யோவான் 16:7*** ல் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார், "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்". அதாவது பரிசுத்த ஆவியானவர் நம்மோடிருப்பது, இயேசு கிறிஸ்து நம்மோடு இருப்பதை விட மிகுந்த பிரயோஜனமானது. பலருக்கும் இது அதிர்ச்சியாக இருக்கும். பலரும் விரும்புவது, இயேசு என்னோடு இருந்தால் நன்றாக இருக்குமே என்று. நாம் மனதிலாக்க வேண்டும், உலகத்தில் மானிட ரூபம் எடுத்து வந்த இயேசுவுக்கு சில வரம்புகள் உண்டு. அவரால் ஒரு நேரத்தில் ஒரு இடத்தில் மாத்திரமே இருக்க முடியும், அவரது சரீரத்துக்கு சில வரம்புகள் உண்டு. ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு இந்த வரம்புகள் ஒன்றும் இல்லை. அவரால் இயேசு கிறிஸ்து தன் மாம்ச சரீரத்தோடு செய்ய முடியாத பலவற்றையும் செய்ய முடியும். அதனால்தான், இயேசுவே சொல்கிறார், நான் போய், பரிசுத்த ஆவியானவர் உங்களோடு வந்து உங்களோடு வாசமாயிருப்பது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும். பலரும் இந்த பிரயோஜனத்தை பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். இதற்கான மூன்று முக்கிய காரணங்களை பார்ப்போம்.

## 1. அறியாமை;

***ஏசா 5:13*** *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்போகிறார்கள்; அவர்களில் கனமுள்ளவர்கள் பட்டினியினால் தொய்ந்துபோகிறார்கள்; அவர்களுடைய திரளான கூட்டத்தார் தாகத்தால் நாவறண்டுபோகிறார்கள்.*

***ஓசி 4:6*** *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்.*

***2கொரி 4:4*** *தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

தேவனுடைய ஜனங்கள் அறிவில்லாய்மையினால் சங்காரமாகிறார்கள். தேவனை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புவதை விட அதிகமாக, அவரைப்பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனாலும் மக்கள் அவர்கள் தேர்ந்தெடுக்கிற வாழ்க்கை முறைகளினால், இந்த அறிவை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு சமயம் இல்லை. பலரும் பலவற்றையும் விசுவாசிக்கிறார்கள். ஆனால் ஏன் அதை விசுவாசிக்கிறீர்கள் என்று கேட்டால், பலரும் சொல்லும் பதில் "அவர் சொன்னார்" அல்லது "இவர் சொன்னார்". அன்பு சகோதரா, சகோதரி ! விசுவாசம் தேவ வசனங்களில் இருந்து வர வேண்டும். ***ரோம 10:17*** *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.* எதை விசுவாசித்தாலும், எப்படி விசுவாசித்தாலும் அது வேதவசனங்களின் அடிப்படையில் இருக்கிறதா என்று சோதித்து பார்க்க வேண்டும். இன்னும் பலரும் விருப்பப்பட்டே இந்த அறிவை வெறுக்கிறார்கள். அவர்களுக்கு தெரியும், எல்லா அறிவும் வேதாகமத்தில் இருக்கிறது என்பது. என்றாலும் பலவித காரணங்களால் அதை ஒதுக்கி வைக்கிறார்கள். சாதாரண அறியாமையை, வேதாகமத்தை கற்றுக்கொள்வதன் மூலம், கற்றுக்கொடுப்பதன் மூலம் தீர்க்கலாம். ஆனால் **"அடம் பிடித்து அறியாமையை",** சாதாரணமாக தீர்க்க முடியாது. இந்த அறியாமை பல சமயங்களில் ஒரு மோசமான சூழ்நிலையில் அம்மனிதரை கொண்டு விடும்.

## 2. தவறான உபதேசம்;

***நீதி 19:27*** *என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களை நீ கேளாதே.*

நீங்கள் பார்க்கின்ற, கேட்கின்ற, ஏற்றுக்கொள்ளுகின்ற அனைத்தும் உங்களுக்குள் சரியான தகவலை அல்லது தவறான தகவலை கொண்டு வரும். தவறான உபதேசங்களுக்கு எதிராக உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.*( நீதி; 4;23 ).* நான் என்ன கற்பிக்கிறேன் என்பது என்னுடைய பொறுப்பு. நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள் என்பது உங்களது பொறுப்பு. சரியான உபதேசம், சரியான விசுவாசத்தை கொண்டு வரும். தவறான உபதேசம் தவறான போதனையை கொண்டு வரும். நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி சரியாக கற்று அறிந்து கொண்டால் அவரோடு கூட ஒரு வெற்றிகரமான வாழ்க்கை வாழ முடியும்.

## 3. சபைகளின் போதனைகள்;

*மாற் 7:8 நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் என்றார்.*

*மாற் 7:13 நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்களும் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்.*

தேவ வசனத்துக்கு எதிரான எந்த உபதேசமும் பொய்யே. *( ரோமர்; 3;4 ).* பரிசுத்த ஆவியைப்பற்றி நாம் படிக்கும்போது ஒரு முக்கியமான காரியத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பலரும் நினைப்பது **"பரிசுத்த ஆவியை பற்றி பாரம்பரிய சபைகளுக்கு ஒன்றும் தெரியாது, அவர்கள் பரிசுத்த ஆவியைப்பற்றி சொல்வது அனைத்தும் தவறு. மாறாக, பரிசுத்த ஆவியை பற்றி எழுப்புதல் சபைகள், தனிப்பட்ட சபைகள், புது சபைகள் இவற்றில் உள்ளவர்களுக்குதான் எல்லாம் தெரியும், அவர்கள் பரிசுத்த ஆவியைப்பற்றி சொல்வது அனைத்தும் உண்மை".** **இந்த இரண்டு கருத்துக்களுமே சரியானது அல்ல.**

**பரிசுத்த ஆவியானவரைப்பற்றி இயேசு கிறிஸ்துவுக்கும், தேவனுக்கும்தான் எல்லாம் தெரியும், வேதாகமம் பரிசுத்த ஆவியைப்பற்றி சொல்வது அனைத்தும் மாத்திரமே உண்மை.** ஆகவே வேதாகமம் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி என்ன சொல்கிறதோ அதை மாத்திரம் நன்றாக தெரிந்து கொள்வது பரிசுத்த ஆவியோடு ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு சிறந்த வழியாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று காரணங்களையும் சரியாக்கி, பரிசுத்த ஆவியானவரின் எல்லா உபயோகங்களையும் அடைய ஒரே வழி **" வேதாகமத்தை கற்றுக்கொள்ளுங்கள் ".**

*2தீமோ 3:16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, 17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்ள முடிகிறெதெல்லாம் வேதாகமத்தில் இருக்கிறது.

## ஒரு விசுவாசியின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் மூன்று விதமான கிரியைகள்.

### 1. பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறத்தல்;

*யோவா 3:1 யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.*

*2 அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்.*

*3 இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*4 அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.*

*5 இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.*

*6 மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.*

இதுவே **அடிப்படையான அடிஸ்தான உபதேசம்.** தேவனுடைய ராஜ்யத்துக்குள் செல்ல முதல் படி. இந்த படி இல்லாமல் நீங்கள் எங்கும் செல்ல முடியாது. இதுவே தொடக்கம். கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவன் என்று சொல்லுவதோ, ஞானஸ்நானம் எடுத்திருக்கிறேன் என்று சொல்லுவதோ, ஒரு சபையில் உறுப்பினராக இருக்கிறேன் என்று சொல்லுவதோ மாத்திரம் போதாது. எந்த ஒரு சபையை எடுத்துக்கொண்டாலும், அவர்கள் செய்வது, ஒரு அல்லது சில வேத வசனங்களின் அடிப்படையில்தான் இருக்கிறது என்று நிரூபிப்பார்கள். பலரும் பல நல்ல மத சம்பிரதாயங்களுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து கொண்டு இருக்கலாம். ஆனாலும் இன்னும் இயேசுவை அறியாதவர்களாக இருக்கலாம். நிக்கொதேமு மத வைராக்கியம் உள்ளவரே. ஒரு பரிசேயன். அதாவது அந்த காலத்தின் ஒரு வேத பண்டிதன். சிலர் சொல்லலாம் எங்கள் சபையில் ரட்சிப்பு, மறுபிறப்பு என்பதெல்லாம் இல்லை. இதெல்லாம் ஒருவேளை உங்கள் சபையில் இல்லாமல் இருக்கலாம் ஆனால் வேதத்தில் இருக்கிறது. இது இயேசுவின் கட்டளை. சிலர் சொல்லலாம் இதற்கு பல அர்த்தங்கள் உண்டு அல்லது வேறு வழிகளிலும் இதை செய்யலாம், என்று. ஆனால் நிக்கொதேமுவின் வார்த்தைகளில் இருந்து, இயேசு ஒரு **"பிறக்கிற காரியத்தை"** பற்றி பேசுகிறார் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். ஒரு பிறப்பு என்றால் அதற்கு ஒரு நேரம், தியதி, இடம் எல்லாம் இருக்க வேண்டும். ஒரு மனிதனின் வாழ்க்கையில் கட்டாயமாக நடந்திருக்க வேண்டிய ஒரு காரியம் இது. இது எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டியது. ஒரு ரகசியம் அல்ல. நாம் இந்த உலகத்துக்குள் பிரவேசித்தது ஒரு "பிறப்பின்" மூலமாகவே. (ஒரு குறிப்பிட்ட தியதியில், சமயத்தில், இடத்தில் ). பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பதும் ஒரு "பிறப்பின்" மூலமாகவே.

**"மறுபடி பிறத்தலின்"** மூலமாக. (ஒரு குறிப்பிட்ட தியதியில், சமயத்தில், இடத்தில்). எல்லோரும் பாவிகளாகவே பிறக்கிறார்கள். மரித்து நரகத்துக்கு செல்ல வேண்டியதே அவர்களின் முடிவு *(ரோமர் 3:23, 6:23).* ஒரு மனிதர் இயேசுவின் மீட்பின் நற்செய்தியை கேட்டு அதை ஏற்றுக்கொள்ளும்போது அவர் மறுபடியும் பிறந்தவர் ஆகிறார். பரலோகம் செல்ல தகுதி ஆகிறார். ஒரு மனிதன் தன் தனிப்பட்ட பாவங்களினால் நரகத்துக்கு செல்லுவதில்லை, அல்லது பாவங்களே செய்யாமல் இருந்து விட்டால் பரலோகம் செல்லுவதும் இல்லை. அவர் இயேசுவின் மீட்பை ஏற்றுக்கொள்ளாததினால் நரகத்துக்கு செல்லுகிறார், அவர் இயேசுவின் மீட்பை ஏற்றுக்கொள்வதினால் பரலோகம் செல்லுகிறார். *( யோவான் 3:15 - 18, 36 ).* இதனால்தான் குழந்தைகள் மரித்தாலும் அவர்கள் பரலோகம் செல்லுகிறார்கள். ஒரு பிள்ளை, அது ' இயேசுவை ஏற்றுக்கொள்வதும், மறுப்பதும் என்ன ? என்று அறிவதற்கு முன்பதாக மரித்துப்போனால் அது பரலோகமே செல்லுவார். மற்ற மதங்களுக்கும், கிறிஸ்தவத்துக்கும் உள்ள ஒரு முக்கிய வேறுபாடு, **"ஒரு ரட்சகர்".** மற்ற மதங்கள் எல்லாம் பாவம் செய்தால் நரகம், புண்ணியம் செய்தால் பரலோகம் என்று கிரியைகளின் அடிப்படையிலேயே இருக்கின்றன. நமது கிறிஸ்தவம் மாத்திரமே **இயேசு கிறிஸ்துவை ரட்சகராக ஏற்றுக்கொண்டவருக்கு பரலோகம், ஏற்றுக்கொள்ளாதவருக்கு நரகம்,** என்று கிருபையின் அடிப்படையில் இருக்கின்றது. ஒரு வேதனையான விஷயம் இன்னும் கிறிஸ்தவ **"மதத்தில்"** இருக்கிற பலருக்கும் இந்த வேறுபாடு தெரியாது. இன்னும் அவர்கள் கிரியைகளின் அடிப்படையிலேயே பரலோகம் செல்ல முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். எனவே ஒரு மனிதர் பரலோகம் செல்லுவதற்கு மறுபடியும் பிறந்திருக்க வேண்டும். **நீங்கள் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா ?** என்பதை உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.

இந்த வசனங்களில் இன்னொரு காரியத்தை நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். ***வசனம் 5*** இப்படி சொல்லுகிறது "*இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். ".* இவ்வசனத்தில் இயேசு சொல்கிற ஒருவன் **"ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்"** என்ற வாக்கியத்தில் உள்ள **"ஜலத்தினாலும்"** என்ற வார்த்தை "தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை குறிப்பிடுவது அல்ல". சிலர் இவ்வார்த்தையை எடுத்து, "ஜலத்தினால் பிறப்பது என்பது, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தால் மறுபடியும் பிறப்பது" என்று சொல்வதுண்டு. இது வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களுக்கு ஒத்தது அல்ல. ஏனென்றால் ஒரு மனிதன் ஞானஸ்நானத்தினால் மறுபடியும் பிறப்பது இல்லை. **ஒரு மனிதன் தேவ வசனத்தை கேட்டு, விசுவாசித்து, அறிக்கையிடும்போது ரட்சிக்கப்படுகிறான், மறுபடியும் பிறக்கிறான்** *( 1பேது 1:23; யாக் 1:18 ; எபே 1:13 ; ரோமர் 10:9,10 ).* இன்னும் வேதாகமத்தில், தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவே, இரட்சிக்கப்பட்டு மறுபடியும் பிறந்த பலரைப்பற்றிய உதாரணங்கள் உண்டு, அவற்றில் சிலவற்றை பார்ப்பொம்.

1. ***அப்போஸ்தலர் 10:44-48,*** வசனங்களின் படி கொர்நெலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்ட போது அவர்கள் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றிருக்க வில்லை. *யோவா 14:17 உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.* இவ்வசனத்தின் படி "உலகம்" அதாவது மறுபடியும் பிறக்காதவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியாது என்று இயேசு சொல்கிறார். அப்படியானால், கொர்நெலியுவும் அவனது வீட்டார்களும் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு முன்பாகவே மறுபடியும் பிறந்திருக்க வேண்டும் அல்லவா. அதனால்தானே அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது.

2. பேதுரு இந்த நிகழ்ச்சியை எருசலேமில் உள்ள திருச்சபையில் சொல்லும்போது ***( அப் 11:1-18 ),*** கொர்நெலியுவும் அவன் குடும்பத்தாரும் மறுபடியும் பிறந்ததற்கு அடையாளமாக, அவர்கள் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பற்றி குறிப்பிடுகிறார். ஆனால் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. ஆதி திருச்சபையில் "ஞானஸ்நானத்தில்தான் மனிதன் மறுபடியும் பிறக்கிறான்" என்ற கோட்பாடு இருந்திருந்தால், நிச்சயமாக அதைப்பற்றி கேள்விகள் கேட்டிருப்பார்கள். ஆனால் அப்படி ஒன்றும் கேட்காமல் பேதுரு சொன்னதை சபை தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

3. ***அப்போஸ்தலர் 19:1-7*** வசனங்களில், பவுல் அப்போஸ்தலன் சுமார் பன்னிரெண்டு சீஷர்களை சந்திக்கிறார். அவர்களை ***"சீஷர்கள், விசுவாசிகள்"*** என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. அவர்கள் யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். பவுல் இதன் பின் அவர்களுக்கு மீண்டும் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார், அதன் பின் அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே **'இயேசுவின் சீடர்களாய், விசுவாசிகளாய்'** இருந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் நிச்சயமாக முன்பே மறுபடியும் பிறந்திருக்க வேண்டும்.

**4.** இயேசு கிறிஸ்து கிறிஸ்தவ தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் பலருக்கும் பாவ மன்னிப்பை கொடுத்தார் ***( மத் 9:2; லூக்கா 7:48,50, 18:14, 19:9, 23:43 ).*** பேதுரு இவ்வாறு செய்தார் ***( அப் 3:19 - 4:4 ).*** பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு செய்தார் ***( அப் 13:38-43, 1 கொரி 1:13 -17, இவ்விரு வேதாகம பாகங்களையும் இணைத்து படிக்கவும் ).***

*யோவான் 3:5* ல் இயேசு **"ஜலத்தினால் பிறப்பது"** என்று கூறியிருப்பதை, சில வேத பண்டிதர்கள், **'மனிதன் இயற்கையாக பிறப்பது'** என்று விளக்குகிறார்கள். மற்றும் சில வேத பண்டிதர்கள் "ஜலத்தினால் பிறப்பது" என்பது **'தேவனுடைய வார்த்தையால் பிறப்பது'** *( யோவான் 15:3; எபே:5:26: யாக் 1:18: 1 பேதுரு 1:23 )* என்று விளக்குகிறார்கள். வேறு சில வேத பண்டிதர்கள் **"ஜலம், ஆவி" இரண்டும் ஆவியையையே குறிப்பிடுகின்றன** என்று விளக்குகிறார்கள். இந்த விளக்கங்கள் அனைத்தும் வேதாகமத்தின் மற்ற கோட்பாடுகளுக்கு ஒத்துப்போகிறவைகளே, வேதாகமத்தின் படி இந்த விளக்கங்கள் ஏற்றுக்கொள்ள முடிகிறவைகளே. ஆனால் இந்த "ஜலத்தினால் பிறப்பது" என்பது 'தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தால் பிறப்பது' என்ற விளக்கம், வேதாகமத்தின் மற்ற கோட்பாடுகளுக்கும், பகுதிகளுக்கும் ஒத்தது அல்ல. தயவு செய்து இதை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். **தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் என்பது இயேசுவின் கட்டளை, இயேசு செய்தது, சீஷர்களின் கட்டளை, சீஷர்கள் செய்தது, ஆதி திருச்சபையின் வழக்கம், ஒரு இரட்சிக்கப்பட்ட விசுவாசி உடனே தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். இது வேதாகமத்தின் கட்டளை. ஒவ்வொரு விசுவாசியும் இதை நிறைவேற்ற வேண்டும். ஆனால் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஜலத்தினால் பிறப்பது' என்பது தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தினால் மறுபடியும் பிறப்பது அல்ல.** ( குறிப்பு; **இரட்சிப்புக்கும் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்துக்கும் உள்ள தொடர்பை பற்றியும்,** *மாற்கு 16:16* **ல் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசம் - ஞானஸ்நானம் -இரட்சிப்பை பற்றியும், கிறிஸ்தவ தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை பற்றியும் நீங்கள் மேலும் அறிய விரும்பினால் தயவு செய்து எமது "கிறிஸ்தவ தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம்" என்ற வேதபாடத்தை படிக்கவும். )**

## 2. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்.

*மத் 3:11 மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.*

மறுபடியும் பிறப்பது, தேவனுடைய பரிபூரண வாழ்வை இந்த பூமியில் வாழ்வதற்கு உங்களை தகுதிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், தேவனுடைய பரிபூரண வாழ்வை இந்த பூமியில் வாழ்வதற்கு உங்களுக்கு பெலன் கொடுக்கிறது.

***(குறிப்பு; பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தை பற்றி அறிந்து கொள்வதற்காக, தயவு செய்து, " பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் " என்ற நமது வேத பாடத்தை படிக்கவும். கர்த்தருக்கு சித்தமானால், சீக்கிரமாக இந்த வேதபாடம் நமது mykalungadi இணையதளத்தில் வெளியிடப்படும் ).***

## 3. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் வாழுதல்;

*அப் 1:8 பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*
இவ்வசனத்தில் **"பெலன்"** என்ற தமிழ் வார்த்தைக்கான மூல கிரேக்க வார்த்தை **"டுனாமிஸ்"** ( Dunamis ) என்பதாகும். இவ்வார்த்தையில் இருந்துதான் 'டைனமைட்' 'டைனமோ' போன்ற வார்த்தைகள் தருவிக்கப்பட்டன. இவ்வார்த்தையின் அர்த்தம்; **ஒரு காரியத்தை செய்வதற்கான திறமை, சக்தி, அற்புத சக்தி, வல்லமை.** கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, நாம் முயற்சி செய்து கிறிஸ்தவனாக வாழுவது அல்ல, மாறாக இயேசு கிறிஸ்து நம்மில், நம்மூலமாக வாழுவது ***(கலா 2:20).*** இயேசு கிறிஸ்து நம்மூலமாக வாழுகிற வாழ்க்கை, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மாத்திரமே வாழ முடியும். மகாத்மா காந்தி ஒரு முறை இப்படியான அர்த்தத்தில் சொன்னார், "நான் கிறிஸ்தவர்களை பார்க்காமல் இருந்திருந்தால் கிறிஸ்தவன் ஆகி இருப்பேன்". மற்றவர்கள் நம்மை பார்க்கும்போது இவன் கிறிஸ்துவை போல வாழுகிறான் என்று சொல்கிற ஒரு வாழ்க்கை வாழ நிச்சயமாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவசியம். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ பரிசுத்த ஆவியானவர் நமக்கு பெலன் கொடுப்பார், திறமை கொடுப்பார்.

**இயேசு கிறிஸ்து.......**

பரிசுத்த ஆவியினால் பிறந்தார்;

*லூக் 1:35 தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.*

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்;
*மத்; 3;13-17.* *லூக் 3:22 பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.*

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் வாழ்ந்தார்;
*லூக்கா; 4;14-19.*
*யோவா 8:29* ல் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார், "*என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்.*" பிதாவுடன் கூட இருந்து, பிதாவுக்கு பிரியமானவைகளையே செய்து வாழும்படியாக இயேசுவால் முடிந்தது. அதே மாதிரியான வாழ்க்கை நாமும் வாழ வேண்டும் என்பதே தேவனின் சித்தம். அதற்காக ஒவ்வொரு மனிதரும் **பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறக்க வேண்டும், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும், பரிசுத்த ஆவியின் வல்லமையினால் வாழ வேண்டும்**. இதுவே பிதாவின் திட்டம்.

## பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள் (சின்னங்கள்).

1. **அக்கினி.** பக்தி வைராக்கியம், புடமிடும் வல்லமை *( லூக்கா 3:16; ஏசாயா 4:3-4; சங்கீதம் 104:4; ).*
2. **புறா.** இனிமை, மென்மை, ஆற்றி தேற்றும் வல்லமை *( லூக்கா 3:22; யோவான் 1:32-33 ).*
3. **தண்ணீர்.** ஜீவன் கொடுக்கிற முடிவில்லாத வல்லமை *( யோவான் 7:37-39 ).*
4. **காற்று.** உயிர்த்தெழுதலின் வல்லமை *( யோவான் 3:8; அப் 2:2; எசே 37:9 ).*
5. **எண்ணெய்.** பரிசுத்தம், அபிஷேகிக்கும் வல்லமை *( ஏசாயா 61:1-3; எபிரேயர் 1:9; யாக் 5:14-16;*
6. **முத்திரை.** பாதுகாப்பின், மீட்பின் வல்லமை *( எபே 1:13; 4:30; 1 பேதுரு 1:5 ).*
7. **அச்சாரம்.** முதலாளித்துவ, உத்திரவாத வல்லமை *( 2 கொரி 1:22; எபே 1:13-14 ).*
8. **மழை.** ஜீவன் கொடுக்கிற, உயிர்ப்பிக்கிற வல்லமை *(யோவேல் 2:23-32; சங் 1:3; சகரியா 10:1; யாக் 5:7;).*
9. **பனித்துளி.** புத்துணர்வு, உற்சாகமளிக்கும் வல்லமை *( சங் 72:6; ஓசியா 14:5 ).*
10. **வரம்.** ஆனந்தம், கிருபை, விடுவிக்கும் வல்லமை *( அப் 2:38-39, 4:31-33; 2 கொரி. 3:17-18; எபி. 1:9 )*

வேதாகமத்தில் எங்கெல்லாம் அக்கினி, தண்ணீர், எண்ணெய், பனித்துளி போன்ற வார்த்தைகளை பார்க்கிறோமோ, அவைகள் எல்லாம் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள் அல்ல. அவை சாதாரணமாக அந்தந்த அர்த்தத்தை குறிப்பிடுகின்றன. ஆகவே நாம் வசனங்களை எடுத்து வியாக்யானிக்கும்போது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தை உண்மையில் பரிசுத்த ஆவியானவரின் அடையாளமாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளதா, அதில் ஏதும் மற்ற அர்த்தங்கள் உள்ளனவா என்று தெளிவாக தெரிந்து கொண்டு பின் வியாக்யானிப்பது நல்லது.

## பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளின் மூன்று யுகங்கள்;

*எபி 1:1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,*
வேதாகமத்தின் பல உண்மைகளை அறிந்து கொள்வதற்கு, ஒவ்வொரு காலத்திலும் தேவன் மனிதரோடு எப்படி நடந்து கொண்டார், ஏன் நடந்து கொண்டார் என்று அறிந்து கொள்வது அவசியம். வேதாகமத்தை தியானித்து பார்க்கும்போது அதில் பல உடன்படிக்கைகளையும், யுகங்களையும் காணலாம். இதில் ஒரு உடன்படிக்கையில், அல்லது ஒரு யுகத்தில் நடந்தது போல சகலமும் அடுத்த யுகத்தில், அடுத்த உடன்படிக்கையில் நடப்பது இல்லை. உதாரணத்துக்கு ஆபேலைக்கொன்ற காயீனை தேவன் கொல்ல வில்லை *(ஆதி 4:15).* ஆனால் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டவுடன், ஓய்வு நாளில் சுள்ளி விறகு பொறுக்கியவனை தேவன் கொல்ல சொல்லுகிறார் *( எண் 15:32-35 ). ரோமர் 5:13* சொல்லுகிறது *"நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது."* நியாயப்பிரமாணம் உள்ள யுகத்தில் பாவம் எண்ணப்பட்டது. நியாயப்பிரமாணம் இல்லாதிருக்கிற யுகத்தில் பாவம் எண்ணப்படவில்லை. பரிசுத்த ஆவியின் கிரியைகளும் தேவனைப்போன்றே, வெவ்வேறு யுகங்களில் வெவ்வேறாக இருந்திருக்கிறது. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில், பரிசுத்த ஆவியின் கிரியைகளைப்பற்றி பலர் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள். அப்படி பிரியப்படுகிறவர்கள், முதலாவது வேதாகம யுகங்களையும், உடன்படிக்கைகளையும் நன்கு அறிந்து கொள்வது நல்லது. வேதாகமம் முழுவதையும் எடுத்து பார்க்கும்போது பரிசுத்த ஆவியானவர் மனிதர்களுடைய வாழ்க்கையில் கிரியை செய்கிறதை மூன்று யுகங்களாக ( கால கட்டங்களாக ) பிரிக்கலாம். இதில் ஒரு கால கட்டத்தில் கிரியை செய்தது போல அடுத்த கால கட்டத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யவில்லை. இதை நாம் தெளிவாக அறிந்து கொள்வது பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய பல வேத வசனங்களை நன்கு புரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

*மத் 3:13* ல் இருந்து *17* வரை உள்ள வசனங்களில் **இயேசுவின் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

*மத் 3:16 இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*

*17 அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.*

*ஆதி 8:8 பின்பு பூமியின்மேல் ஜலம் குறைந்து போயிற்றோ என்று அறியும்படி, ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியே விட்டான்.*

*9 பூமியின்மீதெங்கும் ஜலம் இருந்தபடியால், அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல், திரும்பிப் பேழையிலே அவனிடத்தில் வந்தது; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடித்துத் தன்னிடமாகப் பேழைக்குள் சேர்த்துக்கொண்டான்.*

*10 பின்னும் ஏழுநாள் பொறுத்து, மறுபடியும் புறாவைப் பேழையிலிருந்து வெளியே விட்டான்.*

*11 அந்தப் புறா சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து சேர்ந்தது; இதோ, அது கொத்திக்கொண்டுவந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருந்தது; அதினாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்துபோயிற்று என்று அறிந்துகொண்டான்.*

*12 பின்னும் ஏழுநாள் பொறுத்து, அவன் புறாவை வெளியே விட்டான்; அது அவனிடத்திற்குத் திரும்பி வரவில்லை.*

வேதாகமத்தில் *( லூக்கா 3:22; யோவான் 1:32-33 ).* புறா, பரிசுத்த ஆவியானவரின் ஒரு அடையாளம், அல்லது குறியீடு அல்லது நிழலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

*வசனம்; 9;* புறா அனுப்பப்பட்டது. இளைப்பாற இடம் இல்லாமல் திரும்பி வந்தது.
*வசனம்; 11.* புறா அனுப்பப்பட்டது. ஒரு ஒலிவ மரத்தின் இலையோடு திரும்பி வந்தது.
*வசனம்; 12.* புறா அனுப்பப்பட்டது. திரும்ப வரவில்லை.

இம்மூன்று நிகழ்ச்சிகளும் மூன்று யுகங்களின் நிழலாக இருக்கிறது.

## 1. பழைய ஏற்பாட்டு யுகம்; ஆதியாகமத்திலிருந்து மல்கியா வரை.

(*ஆதி 8: 9;* புறா அனுப்பப்பட்டது. இளைப்பாற இடம் இல்லாமல் திரும்பி வந்தது. )
பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மறுபடியும் பிறக்க முடியாமல் இருந்தது. அவர்களிடம் பாவ சுபாவம் இருந்தது. ஆகையால் பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் நிரந்தரமாக தங்கி இருக்க முடியாமல் இருந்தது. சில குறிப்பிட்ட மனிதர்களிடம், சில குறிப்பிட்ட காலத்துக்கு, சில குறிப்பிட்ட ஊழியங்களுக்காக, பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் வந்தார். பின் அக்காரியம் நிறைவேறினவுடன் அவர்களிடம் இருந்து திரும்பி சென்றார்.
*உ.ம்; 1 சாமுவேல்; 10;6, 10. 11;6. 16;14. நியாயாதிபதிகள்; 13;25, 14;6,19. 15;14. 16;19.*

*1பேது 1:11 தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.*

*சங் 51:11 உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.*
பழைய உடன்படிக்கையின் யுகத்தில், ஆவியானவருக்கு நிரந்தரமாக தங்க இடம் இல்லாமல் இருந்தது. மேலும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் மறுபடியும் பிறக்காததால், அவர்களது மரித்துப்போன ஆவியோடு பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்க முடியாது. தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள் என்றாலும், அவர்கள் குறிப்பிட்ட பாவங்களை செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் அவர்களை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டார். அல்லது பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்ட நோக்கம் முடிந்தவுடன் அவர் திரும்ப சென்றார்.

## 2. சுவிஷேஷ யுகம்; மத்தேயுவில் இருந்து யோவான் வரை.

( *ஆதி 8:11.* புறா அனுப்பப்பட்டது. ஒரு ஒலிவ மரத்தின் இலையோடு திரும்பி வந்தது. நியாயத்தீர்ப்பு முடிந்தது.)
**உயிர்த்தெழுதல்;**

*ரோம 8:11 அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.*
புறாவின் வாயில் ஒலிவ மர இலை, பாவத்தின் மீதான நியாயத்தீர்ப்பு முடிவடைந்து விட்டது, என்பதை காண்பிக்கிறது. பாவத்துக்கான நியாயத்தீர்ப்பு முழுவதும் இயேசுவின் மேல் விழுந்தது.

*யோவா 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

## 3. சபை யுகம். புதிய ஏற்பாட்டு யுகம்; பெந்தேகோஸ்து நாள் முதல் இப்போது வரை.

( *ஆதி 8:12.* புறா அனுப்பப்பட்டது. திரும்ப வரவில்லை.)
பழைய ஏற்பாட்டின் காலத்திலும் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் வல்லமையாகத்தான் இருந்தது. ஆயினும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கான பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் முற்றிலும் வேறுபட்டதாகும். ஒரு முக்கியமான வேறுபாடு என்னவெனில், ஒருமுறை ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டால், அவரிடம் பரிசுத்த ஆவியானவர், **நிரந்தரமாக இருக்கிறார்.** பழைய ஏற்பாட்டு யுகத்தில் பரிசுத்த ஆவியானவர் மனிதர்களிடம், வந்தும் போயும் இருந்தார். இதனால்தான் தாவீது தன்னை விட்டு ஆவியானவரை எடுத்து போடாதேயும் என்று *சங்; 51;11* ல் ஜெபிக்கிறார். இது புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். *( ரோமர்; 8;35-39. எபே;1;13-14. எபி;13;5.).*
இப்போது பரிசுத்த ஆவியானவர் வந்து நிரந்தரமாக தங்குகிறார். அவர் தன்னை பெற்றுக்கொண்ட விசுவாசிகளிடம் நிரந்தரமாக அவர்கள் உள்ளில் இருக்கிறார். *( ரோமர்; 8;11 ).* பரிசுத்த ஆவியானவர் நம்முள்ளில் நிரந்தரமாக இருக்கிறார், அவர் நம்மை விட்டு செல்வது, மீண்டும் திரும்பிவருவதும், செல்வதும், வருவதும் இல்லை.

*யோவா 14:16 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

*ரோம 8:14 மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.*

*ரோம 8:16 நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.*

*எபே 1:13 நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். 14 அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.*

*எபி 13:5 நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.*
*ரோமர்; 8;35-39. மத்;28;20, யோவான்; 14;17,23. எபே 4:30, 1 பேது; 4;14.*

இவ்வசனங்களை பிரசங்கித்தால் பலரும் இவ்வசனங்கள் என்ன சொல்கிறது என்பதை விசுவாசிக்க முற்படுவதில்லை. மாறாக உடனே அவர்கள் கேட்பது, "அப்படியானால் நான் என்ன பாவம் செய்தாலும் பரிசுத்த ஆவியானவர் என்னை விட்டு போக மாட்டாரா?". இதற்கு பதில் சொல்வதற்கு முன்பாக இப்படி கேள்வி கேட்பவர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், "உங்களுக்குள் ஏன் இப்படி ஒரு கேள்வி எழுகிறது? நம்முடைய பள்ளி, கல்லூரி தேர்வு சமயங்களில் நடக்கிற ஒரு நிகழ்ச்சியை நினைவு கூருவோம். சாமுவேல் சார் நல்லவர், அடிக்க மாட்டார், ஏதாவது தவறு செய்தாலும் காண்பித்து கொடுக்க மாட்டார், அன்பானவர், கருணை உள்ளவர். காலையில் ஒரு மாணவன் வந்து சொல்லுவான், இன்று சாமுவேல் சார் கண்காணிப்பாளராக வருகிறார். உடனே நம் மனதில் அன்று எழுந்த கேள்வி, "ஆஹா! அப்படியானால் இன்று காப்பி அடிக்கலாமா?". இக்கேள்வி தவறுதலாக அன்று எழுந்தது, இன்றும் எழலாமா? இது உலகப்பிரகாரமாக மனித மனதில் ஆழப்பதிந்த எண்ணம். தட்டிக்கேட்பவர் இல்லை என்றால் தவறு செய்யலாம். இதைத்தான் நாம் தேவனுக்கு முன்பாகவும் செய்கிறோம். ஆனால் தேவன் உலகப்பிரகாரமானவர்கள் நம்மோடு நடப்பது போல நடந்து கொள்வது இல்லை.
உதாரணத்துக்கு,
*ரோம 5:8 **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே,** தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*
*ரோம 5:13 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் **பாவம் எண்ணப்படமாட்டாது.***
*2கொரி 5:19 அதென்னவெனில், **தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்,** கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*
*கலா 2:21 நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; **நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால்,** கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.*
இந்த வசனங்களில் உள்ள சில வார்த்தைகளை பார்த்தவுடன், அல்லது இதை யாராவது எடுத்து பிரசங்கித்தவுடன் சிலரது மனதில் வரும் கேள்வி, "அப்படியானால் பாவம் செய்யலாமா ? பாவம் செய்யலாம் என்று இந்த வசனங்கள் சொல்கிறதா ?. இவர்களை நான் குற்றப்படுத்தி, நியாயந்தீர்க்கவில்லை. ஆனாலும், உண்மையில் நாம் தேவனை நேசிக்கிறவர்கள் என்றால், " ஐயோ! என் தேவனின் அன்பு எவ்வளவு பெரியது. நான் பாவியாயிருக்கும்போதே எனக்காக தன் குமாரனை மரிக்க கொடுத்தாரே. என் பாவங்களை பார்க்காமல் என்னை சிநேகிக்கிறாரே. என் குறைவுகளை, குற்றங்களை, தவறுகளை பார்க்காமல் என் மேல் அன்பு கூருகிறாரே. இந்த உலகத்தில் யாரும் என் மேல் இப்படி அன்பு கூர முடியாதே. அன்பு கூர்ந்தது இல்லையே. என் தேவன் என்னை எவ்வளவாக நம்புகிறார். என்னை நம்பி இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய தன்னுடைய பரிசுத்த ஆவியானவரையே எனக்குள் தந்திருக்கிறாரே. என்ன மாபெரும், ஒப்பில்லாத, கள்ளங்கபடமில்லாத, தூய அன்பு இது. **இந்த அன்புக்கு முன்பாக எப்படி நான் துணிந்து பாவம் செய்வேன் ? எப்படி என்னால் செய்ய முடியும் ? "** என்று அல்லவா நம் கண்களில் கண்ணீர் நிறைந்து மனதில் உறுதியும்,

அன்பும் பொங்கி எழ வேண்டும். பாவமும் அதன் கொடூரமும் தூள் தூளாக வேண்டும். பாவம் என்கிற ஒன்று நம் வாழ்வில் இல்லை, என்னால் அதை செய்யவே முடியாது என்கிற நிலை வர வேண்டும். பாவம் என்றால் என்ன என்று ஒரு காலத்தில் எனக்கு அனுபவப்பூர்வமாக நன்றாக தெரியும். ஆனாலும் பின் ஒரு சமயம் இந்த வசனங்களை நான் படித்த போது, இப்படித்தான் என் கண்கள் கண்ணீரால் நிறைந்தது. என் தேவன் கிருபையில் ஐசுவரியமுள்ளவர். கிருபை என்பது ஒரு தகுதியும் இல்லாதவர்களுக்கு தேவன் கொடுக்கிற தயவு. பவுல் அப்போஸ்தலன் ஒரு காலத்தில் 'பாவிகளில் பிரதான பாவி'. அவர் தேவனுடைய கிருபையை மனதிலாக்கிய பின், கண்களில் கண்ணீரோடு, நெஞ்சமெல்லாம் நன்றியோடு எழுதிய வசனங்கள்தான் இவை. ( குறிப்பு: **ஆனாலும் சிலருடைய மனதில் எழுகிற, அப்படியானால் பாவம் செய்யலாமா ? ஒரு விசுவாசி பாவம் செய்தால் என்ன சம்பவிக்கும் ? பரிசுத்த ஆவியானவர் எப்போது நம்மை விட்டு போவார் ? போன்ற கேள்விகளுக்கான விடைகள் விளக்கங்களை எல்லாம் விரைவில் நமது mykalungadi இணையதளத்தில் வெளியிடப்படும் "முற்றிலும் பூரணமாக்கப்பட்டவர்கள்" என்ற வேத பாடத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம் ).** **எப்போதும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள், பரிசுத்த ஆவியானவர் துக்கப்படும்படியான யாதொரு பாவத்தையும் செய்யாதீர்கள். பாவத்தின் சம்பளம் என்றுமே மரணம்தான். பாவத்தின் விளைவுகள் என்றுமே அழிவுதான்.**

## பரிசுத்த ஆவியானவரைப்பற்றியதான இயேசுவின் முக்கியமான உபதேசங்கள்;

### 1. பரிசுத்த ஆவிவானவர் நம்முள்ளில் மாற்றங்களை உண்டாக்குகிறார்.

*யோவான்; 3;1-6.*

*2கொரி 5:17 இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நம்முடைய ஆவியில் மாற்றங்கள் நடப்பது மாத்திரம் அல்ல. நம் ஆவியில் நடந்திருக்கின்ற மாற்றங்கள் நம் ஆத்துமாவிலும், சரீரத்திலும் வெளிப்படுவது. இந்த வெளிப்பாடு நம் வாழ்க்கையில் நடைபெற பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார். அவரது உதவியால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

### 2. பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆராதிக்க வைக்கிறார்;

**ஆராதனை.** வழிபாடு, வணக்கம், போற்றரவு, மதிப்பார்வம், வழிபடு, தொழு, வணங்கு, மதித்தாதரி, பூசித்துபோற்று. நமஸ்கரித்தல். ஆராதனை.

**முழு தாழ்மையோடு தேவனோடு தொடர்பு கொண்டு மதித்து அவரை பணிந்து கொள்ளுதல்.**

*யோவான்; 4;7-24. யோவா 4:23 உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.*

*24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*

*1கொரி 14:15 இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.*

ஒரு சாதாரண சரீரமும், ஆத்துமாவும் எப்போதும் உலகப்பிரகாரமான காரியங்களிலேயே நாட்டம் செலுத்தும். தேவன் நம்மை சிருஷ்டித்த நோக்கங்களில் ஒன்று "நாம் அவரை ஆராதிக்க வேண்டும்" என்பது *(யோவான் 4:25).* இப்படி ஆராதிப்பதற்கான பெலன், அறிவு, நாட்டம், ஆவல், வழி நடத்துதலை பரிசுத்த ஆவியானவர் தருகிறார்.

### 3. பரிசுத்த ஆவியானவர் நம்முள்ளில் இருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடச்செய்வார்.

*யோவா 7:37 பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.*

*38 வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.*

*39 தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.*

*அப் 1:8 பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

*( எசே; 47; 1-9. ஏசாயா 58:11 ).*

இங்கே **'ஜீவத்தண்ணீருள்ள நதிகள்'** என்ற வார்த்தை 'பரிசுத்த ஆவியையும் அவர் ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் உருவாக்கும் விளைவுகளையும்' குறிக்கிறது. *கலாத்தியர் 5:22-23 ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,*

*23 சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.*

இந்த நற்குணங்கள் நம்மிடத்தில் இருந்து ஒரு நதியைப்போல புறப்பட்டு ஓட வேண்டும். நாம் நம்முடைய சிந்தனைகளை தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றதாக ஆக்கும்போது இது தாராளமாக நடக்கும் *( நீதி 23:7; ஏசா 26:3; ரோமர் 8:6, 12:2 )*

## பரிசுத்த ஆவியின் 6 குணாதிசயங்கள்;

*யோவா 14:16 நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

*17 உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

*18 நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்.*

*யோவா 14:26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.*

*27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.*

1. பரிசுத்த ஆவியானவர் - தேற்றரவாளன். *வச; 16.*

   ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் குற்ற உணர்வை கொண்டு வருவதில் முக்கிய பங்கு ஆற்றுவது 1. மனசாட்சி 2. உலகம் 3. பிசாசு. தேற்றுதல் இல்லாமல் எந்த மனிதனுக்கும் வாழ்க்கையில் முன்னேற முடியாது. சர்மா என்ற ஒரு இந்திய அறிஞர் இவ்வாறாக சொன்னார், " உற்சாகமூட்டுதலும் தேற்றுதலும் மனித முயற்சிக்கு ஒரு பறவையின் இரண்டு சிறகுகளைப்போன்றது ". பல விசுவாசிகளுடைய துவண்டு போன வாழ்க்கைக்கு காரணம் இந்த குற்ற உணர்வு. பரிசுத்த ஆவியானவர் இந்த தாக்குதலுக்கு எதிரான ஒரு பெரிய கோட்டை. பரிசுத்த ஆவியானவர் உங்களோடு இருக்கிறார் என்ற அசைக்க முடியாத விசுவாசம் உங்களோடு இருந்தால், நீங்கள் ஒரு போதும் துவண்டு, சோர்ந்து போக வேண்டியதில்லை.

2. பரிசுத்த ஆவியானவர் நம்மோடு என்றென்றைக்கும் இருப்பார். *வச;16.*

   **"தேவன் நம்மோடு"** என்ற உன்னத சத்தியம் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் எல்லோரும் ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தது *(மத்தேயு 1:23, 1 பேதுரு 1:10 - 12).* அவர்கள் காத்திருந்த போதும் அவர்களுக்கு கிடைக்காமல் நமக்கு கிடைத்திருக்கிற மாபெரும் ஆசீர்வாதம். *( கொலோ 1:27).* ஒரு நிமிடம் நிதானித்து இதை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்வோமானால் உலகத்தில் பெரிய எழுப்புதல் நடக்கும். சர்வ வல்ல, சர்வமும் அறிந்த, சர்வ வியாபியான தேவன் நமக்குள் வாசமாயிருப்பது. இது தேவனுடைய மகத்தான கிருபை. தேவன் பரிசுத்த ஆவியானவராக நம்முள் வாசமாயிருக்கிறார்.

3. பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவி. *வச;17.*

   பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் ஒரு மனிதரால் தான் காணாதவற்றை விசுவாசிக்க முடியாது. அவரே எல்லா ஆவிக்குரிய சத்தியங்களையும் நமக்கு சொல்லி தருகிறவர். *(1 கொரி 2:14)*

4. பரிசுத்த ஆவியானவரை உலகம் பெற்றுக்கொள்ள முடியாது. *வச;17.*

   இங்கே உலகம் என்று இயேசு குறிப்பிடுவது மறுபடியும் பிறக்காதவர்களை. மறுபடியும் பிறக்காதவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

5. பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் நமக்கு போதிப்பார். *வச;26.*

   பரிசுத்த ஆவியானவரே எல்லா வசனங்களின் வெளிப்பாடுகளையும் நமக்கு தருகிறவர். **பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வெளிப்பாடுகளின் காரணகர்த்தராக இருக்கிறார்.** *( யோவான் 15:26; 16:7-11; 16:13-15* )

6. பரிசுத்த ஆவியானவர், இயேசு சொன்ன எல்லாவற்றையும் நமக்கு நினைப்பூட்டுவார். *வச; 26.*

   வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் என்ன செய்வதென்று நாம் கேட்போமானால், பரிசுத்த ஆவியானவர் உடனே இயேசு சொன்னவற்றை நமக்கு நினைப்புட்டுவார். நாம் அதன்படி உடனே செய்ய முடியும்.

## பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு செய்கிற காரியங்கள்;

*யோவா 16:12 இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.*

*13 சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.*

*14 அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.*

1. **பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார்.**

   மீட்பின் சத்தியம், மறுபிறப்பின் சத்தியம், நமது அதிகாரத்தை குறித்த சத்தியம் போன்ற சகல சத்தியங்களுக்குள்ளும் நம்மை நடத்துவார்.

2. **பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய அதிகாரத்தில் இருந்து பேசாமல் பரலோகத்தில் இருந்து கேட்பவற்றை பேசுவார்.**

3. **பரிசுத்த ஆவியானவர் வரப்போகிற காரியங்களை நமக்கு அறிவிப்பார்.**

   ஒரு விசுவாசி ஏதாவது தவறான முடிவை எடுத்து பின்பு கஷ்டப்பட வேண்டியதில்லை. வரப்போகிற காரியங்களை பரிசுத்த ஆவியானவர் நமக்கு அறிவிக்கும்போது, அதை கேட்பதற்கு சமயமும், இதயமும் கொடுத்து கேட்டால் போதும். பல பிரச்சினைகளை தவிர்த்து விடலாம்.

4. **பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்துவார்.**

   ஒரு தத்துவம் அல்லது கோட்பாடு பிரசங்கிக்கப்படுகிறது. அது உண்மையா, பொய்யா என்று கண்டு பிடிப்பது எப்படி ? அதன் விடைதான் இது. அந்த தத்துவம் இயேசுவை மகிமைப்படுத்துகிறதா என்று பார்க்க வேண்டும். அது மகிமைப்படுத்துமானால் அது பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டது என்று பொருள். அது இயேசுவை மகிமைப்படுத்த வில்லை என்றால் எவ்வளவு நல்ல தத்துவமாக இருந்தாலும் அது பரிசுத்த ஆவியினால் ஏவப்படவில்லை என்று அர்த்தம்.

5. **பரிசுத்த ஆவியானவர் இயேசுவிடம் இருந்து பெற்று அதை நமக்கு அறிவிப்பார்.**

## பெலம், சாட்சி;

*அப் 1:8 பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.*

பெலன்; கிரீக்;டுனாமிஸ்; ஆற்றல், ஒரு காரியத்தை செய்வதற்கான திறன். வல்லமை. சக்தியான வேலை.

1. நம்முடைய ஆவியை தேவனோடு நேரடியாக தொடர்பு கொள்ளும்படியாக விடுவிக்கும் **பெலன்.** *அப்; 2;1-4. 1 கொரி;14;2. 14;14,15.*
2. உபத்திரவத்தை எதிர்கொள்ளும்படியாக **பெலன்.** *அப்;3,4.*
3. மரணத்தையும் எதிர்கொள்ளும்படியான **பெலன்.** *அப்; 7;54-60.*
4. பிசாசையும் அசுத்த ஆவிகளையும் எதிர்கொள்ளும்படியான **பெலன்.** *அப்;13;2-8, 9-12.*

இந்த காரியங்களை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும்போது நாம் இயேசுவுக்கு **ஒரு நல்ல சாட்சியாக** இருப்போம்.

அன்பு சகோதரா, சகோதரி ! பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்படி தேவனால் அனுப்பப்பட்டவர். அவர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர், சர்வ வல்லவர். அதோடு கூட அவர் உங்கள் வழிகாட்டி, நண்பர், ஆலோசகர், தேற்றரவாளன். அவர் என்றென்றும் உங்களோடு இருப்பவர். அவருடைய ஆலோசனையோடு, வழிநடத்துதலோடு, பாதுகாவலோடு ஒரு வெற்றிகரமான விசுவாச வாழ்க்கை உங்களால் வாழ முடியும். மற்றவர்களுக்கும் அது ஒரு சாட்சி உள்ள வாழ்க்கையாக அமையும். அவரால், அவருக்குள், அவரோடு வாழுவோம். **ஆமென்.**

**குறிப்பு;** இதன் தொடர்ச்சியான 'பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்' 'பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்' போன்ற வேதபாடங்கள் தொடர்ந்து வெளியிடப்படும்.

**தேவன் உங்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**சகோ. D. வெர்ஜின் குமார்.**
If you have any doubts, need clarifications, kindly contact me in deeveekumar@yahoo.com Ph.96825572195, 968 99663557.

**Reference;** Dake's bible commentary, Andrew Wommack bible commentary, Bible Background commentary, Vine's expository Dictionary of New Testament words, Strong's bible concordance, Don krow's Discipleship evangelism lessons, Amplified bible, Wendell Parr's "The Holy Spirit", etc..All bible quotes are from King James Version and Amplified bible.